**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.**

**அசல் வழக்கு எண்.269/2020**

**பி.வா.சா. –3– அல்போன்ஸ் அமிர்தம்மாள்**

**நாள். 21.03.2025**

**பி.வா.சா.3 இன்று ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 1ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

தாவா சொத்தானது சிறுமலை கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான். எனது கணவரும் வாதி ஆரோக்கிய மேரி, 1ஆம் பிரதிவாதி ஞானபிரகாசமும் உடன் பிறந்தவர்ககள் என்றால் சரிதான். எனக்கு 1971ஆம் ஆண்டு திருமணமானது. எனது திருமணத்தின் போது எனது கணவருக்கு வயது 18 என்றால் சரிதான். எனக்கு வயது 16 என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்துள்ள வாதி ஆரோக்கிய மேரி என்பவரின் திருமணம் பற்றி எனக்கு தெரியாது. வாதி ஆரோக்கிய மேரிக்கு 1968 ஆண்டு திருமணம் நடைபெற்றது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதி ஆரோக்கிய மேரிக்கு திருமணம் நடைபெற்ற போது எனது கணவருக்கு வயது 15 என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதி ஆரோக்கிய மேரிக்கு திருமணத்தின் போது 1ஆம் பிரதிவாதி ஞானபிரகாசத்திற்கு வயது 25 என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சம்பந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்து அதில் தாவா சொத்தை குறித்து சொல்லவில்லை என்றால் சரிதான். எனது கணவர் மைனராக இருந்ததார் என்றாலும், தாவா சொத்தை எனது மாமனார் அந்தோனியும், 1ஆம் பிரதிவாதியும் ஞானபிரகாசமும் சம்பாதித்தார்கள் என்றால் சரிதான். எனது கணவர் தான் அவரது குடும்பத்தில் நன்கு படித்தவர் என்றால் சரிதான். 1ஆம் பிரதிவாதிக்கு எழுதப்படிக்க தெரியாது என்றால் சரிதான். வாதி ஆரோக்கிய மேரிக்கு திருமணத்தின் போது எனது கணவர் மைனராக இருந்தார் என்றாலும் எனவே, வாதிக்கு திருமணத்தின் போது சீர்வரிசைகள் எனது கணவர் செய்திருக்க முடியாது என்றாலும், சீர்வரிசைகள் அனைத்தையும் 1ஆம் பிரதிவாதி தான் செய்தார் என்றால் சரியல்ல.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1ஆம் பிரதிவாதி எனது கணவரின் அண்ணன் என்றால் சரிதான். வாதி ஆரோக்கிய மேரி எனது கணவரின் அக்கா என்றால் சரிதான். எனது கணவருடன் பிறந்தவர்கள் 1ஆம் பிரதிவாதியும், வாதியும் மட்டுமே என்றால் சரிதான். வாதி ஆரோக்கிய மேரி தாக்கல் செய்த வழக்கு சொத்தின் சர்வே எண் 64/1A ஆகும். வாதி தாவாவில் 1 ஏக்கர் சொத்தில் பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார். 24.12.1975 அன்று தாவா சொத்தை எனது மாமனார் அந்தோனி பெயரில் கிரைய பெற்றார் என்றால் சரிதான். எனது கணவர் தர்மராஜ் பணம் கொடுத்து என் மாமனார் பேரில் கிரையம்

பெற்றதாக சொல்லப்படவில்லை என்றால் சரிதான். வாதியின் முதல் கணவர் செல்வராஜ் பெயரில் 12.07.1972 ல் சர்வே எண்.47/11 ல் 1 ஏக்கர் 50 செண்ட கிரையம் பெற்ற விபரம் எனக்கு தெரியாது. மேற்படி கிரையம் பெற்ற சொத்தை செல்வராஜ் பேச்சியம்மாள் என்பவருக்கு 23.09.1974 ல் கிரையம் கொடுத்துவிட்டார்கள் என்றால் சரிதான். மேற்படி பத்திரத்திலும் மேற்படி செல்வராஜம் மற்றும் வாதி ஆரோக்கிய மேரியும் சேர்ந்து கிரையம் பெற்ற சொத்து என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 17.08.1977 ல் பேச்சியம்மாள் மேற்படி செல்வராஜ் என்பவரிடமிருந்து கிரையம் பெற்ற சொத்தை இன்னாசியம்மாளுக்கு கிரையம் செய்துள்ளார் என்றால் சரிதான். 28.04.1984 ல் இன்னாசியம்மாள் மேற்படி சொத்தை எனது கணவருக்கு கிரையம் செய்து கொடுத்தார் என்றால் சரிதான். மேற்படிஎன் கணவருக்கான கிரைய பத்திரத்தின் படி சர்வே எண்.47/11 ல் 1 ஏ 50 செ என்றால் சரிதான். மேற்படி 1 ஏ 50 செண்டில் எனது கணவர் கிரையம் பெற்றதால் அதற்கான மூல ஆவணங்கள் என்னிடம் தான் உள்ளது என்றால் சரிதான். அதற்கான ஆவணங்கள் தான் நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.14 முதல் 16 ஆவணங்கள் என்றால் சரிதான். என் கணவர் இறப்பின் பேரில் மேற்படி சொத்திற்கான கூட்டுபட்டா என் பெயரிலும் எனது குழந்தைகள் பெயரிலும் உள்ளது என்றால் சரிதான். மேற்படி கூட்டுபட்டாவை நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்துள்ள சொத்து வேறு என்றாலும், என் பெயரிலும், எனது குழந்தைகள் பெயரிலும் கூட்டுப்பட்டாவும், ஆவணங்களில் உள்ள சொத்து வேறு என்றாலும், தாவா சொத்திற்கும் அதற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. வாதி அவரது தகப்பனார் அந்தோனி பெயரில் உள்ள சொத்தான சர்வே எண்.64/1A சொத்தை பொறுத்து தான் பாகம் கோருகிறார் என்றாலும், எனவே அவர் கோரியுள்ள பாகம் கிடைக்கதக்கது என்றால் சரியல்ல. தாவா சொத்தை பொறுத்து எனது கணவர் இறப்பின் பேரில் எனது மற்றும் எனது குழந்தைகள் பேரில் பட்டா மாறுதல் செய்தது குறித்து வாதிக்கு மற்றும் 1 ஆம் பிரதிவாதிக்கு அறிவிப்பு வழங்கப்படவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தில் ஒரு பகுதியில் 1 ஆம் பிரதிவாதி வாழை விவசாயம் செய்து வருகிறார் என்றால் இல்லை. எனது கணவரின் தகப்பனார் அந்தோனி பேரில் உள்ள சொத்துக்களை பொறுத்து வாதிக்கும், 1 ஆம் பிரதிவாதிக்கும் பங்கு உண்டு என்றாலும், அதை மறைத்து நாங்கள் கூட்டுபட்டா மேற்படி வாதி மற்றும் 1 ஆம் பிரதிவாதியின் பெயர் சேர்க்கதாது பெற்றுள்ளோம் என்றால் சரியல்ல. எனது கணவர் என்ன படித்துள்ளார் என்பது தெரியாது. என் கணவர் தான் மேற்படி சொத்தை கவனித்து வந்தார் என்பதால் தான் என் கணவர் பெயரில் மட்டும் தாவா சொத்துக்கான அடங்கல் (பி.வா.சா.ஆ.8)உள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சாஆ.9 ன் படி மோசஸ், பிலோமினால், தாஸ், டேவிட், சேசு, மணியார், ஆரோக்கியம், தாவீது ஆகியோர்கள் மீது புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். பாதை சம்பந்தமாக எங்களுக்கும் மேற்படி மோசஸ், பிலோமினால், தாஸ், டேவிட், சேசு,

மணியார், ஆரோக்கியம், தாவீது ஆகியோர்கள் இடையே திண்டுக்கல் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி வழக்கில் வாதியோ, 1 ஆம் பிரதிவாதியோ தரப்பினராக இல்லை என்றால் சரிதான். மேற்படி பி.வா.சா.ஆ.9 புகாரானது பாதை சம்பந்தபட்ட பிரச்சனைக்காக கொடுக்கப்பட்டது என்றும் அதற்கும் தாவாவிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. மேற்படி வழக்கு முடிந்துவிட்டது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.10 என் கணவர் சேவியர் என்பவர் மீது புகார் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி புகார் மனுவில் என் கணவர் சேவியர் என்பவர் தோட்டத்தின் வழியே வேட்டைக்கு சென்றதை தட்டி கேட்டு மேற்படி சேவியர் எனது கணவரை கீழே தள்ளி அசிங்கமாக திட்டியது சம்பந்தமானது என்றால் சரிதான். மேற்படி புகாருக்கும் தாவா சொத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.11 ஆவணத்தில் சேசு, டேவிட் லியோ வேளாங்கண்ணி, ஆரோக்கிய தாஸ் ஆகியோர்கள் என் தோட்டத்திற்கு வந்து தகராறு செய்தது சம்பந்தமாக கொடுக்கப்பட்ட புகார் என்றால் சரிதான். மேற்படி புகாருக்கும் தாவா சொத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரிதான். 2007 ஆம் ஆண்டு பி.வா.சா.ஆ.12 ஆவணத்தில் சேசு (எ) சேசுராஜ், ராமர் மகன் அலெக்ஸ் ஆகியோர்கள் பட்டா நிலத்தில் அத்துமீறி தகராறு செய்தது சம்பந்தமாக கொடுக்கப்பட்ட புகார் என்றால் சரிதான். மேற்படி புகாருக்கும் தாவா சொத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரிதான். 07.02.2007 ஆம் ஆண்டு பி.வா.சா.ஆ.13 ஆவணத்தில் சேசு (எ) சேசுராஜ், டேவிட் வேளாங்கண்ணி ஆகியோர்கள் மனுதாரரின் காட்டில் அத்துமீறி நுழைந்து பாதை கேட்டு தகராறு செய்தது சம்பந்தமாக கொடுக்கப்பட்ட புகார் என்றால் சரிதான். மேற்படி புகார் சம்பந்தமாக தான் திண்டுக்கல் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு நடந்தது என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு சம்பந்தமில்லாத ஆவணங்கள், மற்றும் எனது கணவர் பேரில் கிரைய பெற்ற மூலஆவணங்களை மட்டும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து எதிர்வாதம் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. வாதி தனது தகப்பனார் பேரில் உள்ள சொத்தில் 1/3 பாகம் கேட்க உரிமை உண்டு என்றாலும் , அதனால் தான் வாதி அவருக்குரிய பாகத்தை கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. வாதி கோரியுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்கதக்கது என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை – இல்லை.**</u>

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

G SARAN

Digitally signed by G SARAN
Date: 2025.03.21 17:38:42 +0530

Additional District Judge(FAC),

Dindigul.